# பெருந்தோட்ட முன்பள்ளிகளின் இன்றைய நிலை மாணவர்களின் எதிர்கால கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம்

அழகு கனகராஜ்
**Registration No: EU/PGS/2016/MED/47**

LIBRARY
17 JUN 2019
EASTERN UNIVERSITY, SRI LANKA

MED143
Thesis
Library - EUSL

கல்வி, பிள்ளை நலத்துறை

கலை கலாசார பீடம்

கிழக்குப் பல்கலைக்கழகம்

இலங்கை

2018

# ஆய்வுச்சுருக்கம் (Abstract of the Study)

பொதுவாக கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் ஆரம்பக்கல்வியான முன்பள்ளிக்கல்வியின் தேவை அறியப்பட வேண்டிய ஒன்றாகும். பெருந்தோட்டங்களில் முன்பிள்ளைக் கல்வியினை அரச, பெருந்தோட்ட, தனியார் நிறுவனங்கள் என பலரும் நடத்தி வருகின்றனர். பல முன்பள்ளிகள் அடிப்படை வசதிகள் இன்றிக் காணப்படுவதுடன் பெருந்தோட்ட நிறுவாகத்தின் கீழ் இயங்கும் முன்பள்ளிகள் பல தொட்டிற் குழந்தைகளையும் முன்கல்விப் பிள்ளைகளையும் இணைத்து முன்பிள்ளைக் கல்வி ஆசிரியர் அல்லாதோரும் கற்பிக்கின்றனர். இவ்வாறான நிலை அம்மாணவர்களின் முறைசார் கல்வியில் பலவகையான பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்ற அடிப்படையில் **பெருந்தோட்ட முன்பள்ளிகளின் இன்றைய நிலை மாணவர்களின் எதிர்கால கற்றலில் ஏற்படுத்தும் தாக்கம்** என்ற தலைப்பில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது.

இவ் ஆய்வானது நுவரெலியா கல்வி வலயம், கோட்டம் மூன்றில் உள்ள நாற்பத்தொரு பாடசாலைகளில் படையாக்கப்பட்ட எழுமாற்று மாதிரி அடிப்படையில் பத்து பாடசாலைகளை மாதிரியாகக் கொண்டு மேற்கொள்ளப்பட்டன. அப்பாடசாலைகளுக்கு பெரும்பான்மையாக செல்லும் பத்து முன்பள்ளிகள் நோக்க மாதிரி அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டதுடன். ஆய்வின் குடித்தொகைகளாக ஒரு முன்பள்ளிக்கு ஒரு முன்பள்ளி ஆசிரியர், ஒரு பெற்றோர், நோக்க மாதிரி அடிப்படையிலும் ஒரு பாடசாலைக்கு ஒரு முதலாம்தர ஆசிரியர், ஒரு பாடசாலைக்கு ஒரு அதிபர் என்ற எளிய எழுமாற்று மாதிரி அடிப்படையிலும் தெரிவு செய்யப்படனர். ஆய்வின் பொது நோக்கத்தின் அடிப்படையில் நான்கு சிறப்பு நோக்கங்கள் உருவாக்கப்பட்டு ஆய்வு கருவிகளாக வினாக்கொத்துக்கள், நேர்காணல் படிவம் இதற்கு மேலதிகமாக ஆய்வாளரின் அவதானிப்பு படிவத்தை பயன்படுத்தியும் தகவல்கள் சேகரிக்கப்பட்டன. சேகரிக்கப்பட்ட தகவல்கள் யாவும் அட்டவணைகள். வரைபுகள் என்பவற்றினைக் கொண்டு Excel மூலம் பகுப்பாய்வு செய்யப்பட்டதுடன் பெருந்தோட்ட முன்பள்ளிகளின் பிரச்சினை என்ன என்பது தெளிவாக கண்டறியப்பட்டதுடன் விதப்புரைப்புகளும் செய்யப்பட்டுள்ளன. இதன் மூலம் பெருந்தோட்ட முன்பள்ளிகளுக்கான பிரச்சினைகளும் ஆலோசனைகளும் எதிர்காலத்தில் எவ்வாறு முன்பள்ளிகள் இயங்க வேண்டும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளன.

மேற்கூறப்பட்ட அடிப்படையில் பெருந்தோட்ட முன்பள்ளிகளுக்கு அடிப்படை வசதிகளான நிரந்தரமான கட்டிடம், மின்சாரம், நீர், மலசலக்கூடம் இல்லாமை இடவசதி போதாமையும் அத்துடன் ஆசிரியர்களில் பலர் குறைந்த பயிற்சியுடனும் குறைந்த சம்பளத்துடனும் காணப்படுவது கண்டறியப்பட்டன. முன்பள்ளியில் சிறப்பான ஆரம்பக்கல்வியை பெற்றுக்கொள்ளாத பிள்ளைகள் புலமைப்பரிசில் பரீட்சையில் சிறந்த புள்ளிகளை பெற்றிருக்கவில்லை. எனவே முன்பள்ளிகளின் கற்றற் சூழலானது சிறப்பானதாக அமையப்பெறவில்லை. இது அம்மாணவர்களின் எதிர்கால கற்றலில் தாக்கத்தை செலுத்துகின்றன என்பதும் கண்டறியப்பட்டன. இவ்வாய்வின் விதப்புரைகளாக அரசு அல்லது பெருந்தோட்ட அமைச்சு பெருந்தோட்ட முன்பள்ளிகளை பொறுப்பேற்று நடத்த வேண்டும். தொழிலாளர்களுக்கு கட்டப்படும் தனி வீட்டுத்திட்டத்தில் தோட்டத்துக்கு ஒரு முன்பள்ளிக்கான இடம் ஒதுக்கி சகல வசதிகளுடனும் நல்ல சூழலுடன் அமைத்துக்கொடுக்க வேண்டும் பெருந்தோட்ட முன்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கான பயிற்சி, வேதனம், இடமாற்றம் உட்பட்ட சகல விடயங்களையும் அரசு பொறுப்பேற்று நடத்த வேண்டும்.

அருஞ்சொற்கள் :- பெருந்தோட்டம், முறைசார் கல்வி, பெருந்தோட்ட அமைச்சு

# பொருளடக்கம் (Contents)


பக்கம்

உறுதி மொழி I

சான்றிதழ் II

நன்றி நவிலல் III

ஆய்வுச்சுருக்கம் IV

அட்டவணைகளின் பட்டியல் VII

உருக்களின் பட்டியல் VIII

பின்னிணைப்புகளின் பட்டியல் X

**அத்தியாயம் 1 அறிமுகம்**

1.1 அறிமுகம்........................................ 1
1.2 ஆய்வுப் பின்னணி........................................ 3
1.3 ஆய்வுப் பிரச்சினை........................................ 5
1.4 ஆய்வின் நோக்கங்கள்........................................ 7
1.5 ஆய்விற்கான நியாயம்........................................ 8
1.6 ஆய்வின் முக்கியத்துவம்........................................ 9
1.7 அருஞ்சொற்களும் அதன் விளக்கங்களும்........................................ 11
1.8 சாராம்சம்........................................ 11

**அத்தியாயம் 2 இலக்கிய மீளாய்வு**

2.1 அறிமுகம்........................................ 12
2.2 முன்பள்ளி சிந்தனையும் முக்கியத்துவமும்........................................ 12
2.3 இலங்கையும் முன்பள்ளிகளும்........................................ 13
 2.3.1 இலங்கையின் முன்பள்ளிகளின் இன்றைய நிலை........................................ 13
 2.3.2 பெருந்தோட்டம் பற்றிய அறிமுகம்........................................ 14
  2.3.2.1 மலையகம் அல்லது பெருந்தோட்டம்........................................ 14
  2.3.2.2 பெருந்தோட்டங்களில் மக்களின் கல்வி நிலை........................................ 15
  2.3.2.3 பெருந்தோட்டங்களில் முன்பள்ளிகளின் இன்றைய நிலை........................................ 15
 2.3.3 முன்பள்ளிகளின் கட்டமைப்பு........................................ 17
 2.3.4 முன்பள்ளிகளின் சூழல்........................................ 17
  2.3.4.1 வகுப்பறையின் பண்புகள்........................................ 18
  2.3.4.2 புலன்களினூடாக கற்றல்........................................ 19
2.4 முன்பள்ளி ஆசிரியர்........................................ 20

2.4.1 முன்பள்ளி ஆசிரியரின் வகிபாகம்.............................. 20
2.4.2 முன்பள்ளி பிள்ளைகளின் திறன்களை வளர்த்தல்...................... 22
2.5 முன்பள்ளி பிள்ளைகளும் எதிர்காலமும்.............................. 24
2.5.1 முறைசார் கல்விக்கு முன்பள்ளியின் பங்கு.......................... 24
2.5.1.1 எதிர்கால முறைசார் கல்விக்கான அடித்தளம்................ 25
2.5.1.2 எதிர்கால முன்பள்ளி கலைத்திட்டத்திற்கான ஆலோசனைகளும் முன்வைப்புகளும்.............. 26
2.6 சாராம்சம்.............................. 27

## அத்தியாயம் 3 ஆய்வுமுறையியல்

3.1 அறிமுகம்.............................. 29
3.2 ஆய்வு நோக்கம்.............................. 30
3.3 ஆய்வின் ஒழுங்கமைப்பும் அணுகுமுறையும்.............................. 30
3.4 ஆய்வுக் குடித்தொகை.............................. 32
3.5 ஆய்வுக்கருவிகளும் தரவுகளை சேகரித்தலும்.............................. 34
3.6 தரவுகளின் பகுப்பாய்வு முறை.............................. 36
3.7 சாராம்சம்.............................. 36

## அத்தியாயம் 4 தரவுகளின் பகுப்பாய்வு, வியாக்கியானமும் கலந்துரையாடலும்

4.1 அறிமுகம்.............................. 37
4.2 பெருந்தோட்டங்களில் இயங்கிவரும் முன்பள்ளிகளின் நிலையை அறிந்துக் கொள்ளல்.............................. 37
4.3 முன்பள்ளி ஆசிரியரின் கல்வி மற்றும் தொழிற் தகமைகளும் கற்றல் கற்பித்தல் முறைகளும்.............................. 55
4.4 முறைசார் பாடசாலைகளில் ஆரம்ப தேர்ச்சிகளில் பெருந்தோட்ட முன்பள்ளிகளின் பங்கு.............................. 71
4.5 பெருந்தோட்ட முன்பள்ளிகள் சிறப்பாக இயங்க வழங்கக்கூடிய ஆலோசனைகளும் தீர்வுகளும் என்ன.............................. 74

## அத்தியாயம் 5 முடிவுகளும் விதப்புரைப்புகளும்

5.1 அறிமுகம்.............................. 84
5.2 முடிவுகள்.............................. 85
5.3 விதப்புரைகள்.............................. 90
5.4 ஆய்வின் வரையறை.............................. 94
5.5 ஆய்வு முடிவுகளின் பிரயோகம்.............................. 94
5.6 தொடராய்வுகள்.............................. 95
5.7 சாராம்சம்.............................. 95

**உசாத்துணை நூல்கள்**.............................. 97